# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 269/2022 நாள்.16.3.26

## PW1- திரு.முருகேசன், த/பெ. திரு.ஜெயராஜ்

1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

1ஆம் வாதி என் அப்பா என்றால் ஆமாம். வழக்கு பற்றிய விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் அப்பா சொல்லி தெரியும். வழக்கு என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்யபட்டுள்ளது என்றால் சாட்சி பதில் எதுவும் சொல்லவில்லை. தாவா சொத்தில் எத்தனை வகை உள்ளது என்றால் இரண்டு வகை உள்ளது. ஏ, பி சி டி என்று நான்காக குறிக்கபட்டுள்ளது என்றால் ஆமாம். எல்லா புல எண்களும் எனக்கு தெரியுமா என்றால் எங்கள் புல எண் தெரியும். என்னுடைய புல எண் என்ன என்றால் புதுகோட்டை மாவட்டம் முதுகுளம் கிராமம் 126/9இல் 36 1/2 ஏர்ஸ். நான் சொன்ன சொத்து கோவிந்தசாமிஉடையாருக்கு சொந்தமானது என்றால் கோவிந்தசாமி உடையார் மற்றும் ரத்தினசாமி உடையாருக்கு சொந்தமானது. கோவிந்தசாமி உடையார் மற்றும் ரத்தினசாமி உடையார் உயிருடன் உள்ளார்களா என்றால் இல்லை இறந்துவிட்டார்கள். கோவிந்தசாமி உடையாருக்கு எத்தனை வாரிசு மற்றும் ரத்தினசாமி உடையாருக்கு எத்தனை வாரிசு என்றால் கோவிந்தசாமி உடையாருக்கு ஒரு பையன், மூன்று பெண்கள் மற்றும் ரத்தினசாமி உடையாருக்கு ஒரு பையன், ஒரு பொண்ணு. கோவிந்தசாமி உடையாரின் வாரிசுகள் சக்திவேல், 2வது பெண் பாப்பாத்தியம்மள், 1, 3வது பெண் பெயர் ஞாபகம் வரவில்லை மற்றும் ரத்தினசாமி உடையாரின் மகன் பெயர் தங்கராஜ, மகள் பெயர் செல்வி. தாவா சொத்தை கோவிந்தசாமி உடையாரின் மகன் சக்திவேல் கிரைய பத்திரம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் அவருடைய பாகத்தை எழுதி கொடுத்துள்ளார். எந்த வருடம் எழுதி கொடுத்தார் என்றால் 1990. அந்த கிரைய பத்திரத்தில் என்பாகம் மட்டும் என்று சொல்லபட்டுள்ளதா என்றால் சொல்லபட்டுள்ளது. அவ்வாறு சொல்லப்படவில்லை என்றும் அவருக்கு சொந்தமான முழு சொத்து என்று உள்ளது என்றால் சரியல்ல. 1992இல் 1ஆம் பிரதிவாதி கோவிந்சாமி உடையார் மகள் பாப்பாத்தியம்மாள் தாவா சொத்தில் அவருக்கு பாகம் கொடுக்கவேண்டும் என்று நோட்டீஸ் விட்டார் என்றால் தெரியாது. பாகம் ஒதுக்கவேண்டும் என்று சொல்லி தஞ்சாவூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ-எண் 346/2004 என்ற வழக்கு விபரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது 2013இல்தான் தெரியும். அந்த வழக்கில் மணி என்பவரும் பிரதிவாதியாக உள்ளார் என்றால் தெரியாது. பாகபிரிவினை வழக்கு 346/2004

பாப்பாத்தியம்மாளுக்கு 1/4 பாகம் என்று தீர்ப்பானது என்றால் தெரியாது. அ.வ எண் 346/2004வழக்கின்படி வழக்கறிஞர் இடத்தை அளந்தார் என்றால் தெரியாது. அவ்வழக்கின் இறுதிநிலை தீர்ப்பாணையில் 126/9 அவருக்கு சொந்தம் என்று தீர்ப்பானது என்றால் தெரியாது. அவர்களின் குடும்பத்தின் போது பாப்பாத்தியம்மாள் கேட்டுகொண்தற்கிணங்க 126/9 புல எண் அவருக்கு பாகமாக ஒதுக்கபட்டது என்றால் எனக்கு தெரியாது. பாகமாக ஒதுக்கிய சொத்தில் பட்டா மாறுதல் கோரியபோது நான் கந்தர்வகோட்டையில் தடைமனு கொடுத்தேன் என்றால் ஆமாம். நான் கந்தர்வகோட்டை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தில் அதற்காக வழக்கு போட்டேன் என்றால் ஆமாம். அந்த வழக்கும், இந்த வழக்கோடு சேர்த்து விசாரிக்க உயர்நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் சேர்த்து விசாரிக்கப்படுகிறது என்றால் ஆமாம். மணி மற்றும் தனலெட்சுமி சேர்ந்து என் அப்பாவிடம் விற்றார்கள் என்றால் ஆமாம். எந்த ஆண்டு என்றால் 2002. தாவா சொத்து கோவிந்த உடையார் வாரிசுகளுக்கு சொந்தமான சொத்து என்றும், சக்திவேல் வகையறாவுக்கு பாத்தியபட்டதல்ல என்றால் சரியல்ல. வா.சா-ஆ.2, 3 சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பாப்பாத்தியம்மாளுக்கு ஒதுக்கபட்ட விபரம் தெரிந்தே என் அப்பா கிரைய பத்திரம் தன் பெயருக்கு ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. என்அப்பா தாவா சொத்தை வாங்கியது சம்மந்தமாக வழக்கறிஞரிடம் சட்டகருத்துரை வாங்கினார் என்றால் தெரியவில்லை. பாப்பாத்தியம்மாள் நீதிமன்றத்தில் சட்டபடியாக வழக்கு தாக்கல்செய்து தீர்ப்பாணை பெற்றதால் அது அவருக்கே சொந்தம் என்றும் என் அப்பா தவறான முறையில் பத்திரம் ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. கோவிந்தசாமி உடையார் மூத்தமகன் வீரம்மாளின் மகளை 2ஆம் பிரதிவாதி சக்திவேல் திருமணம் செய்துகொண்டார் என்றால் ஆமாம். பாப்பாத்தியம்மாள் நீதிமன்றம் மூலமாகதான் தீர்ப்பாணை பெற்றார் என்றும் அது அவருக்கு சொந்தம் என்றும் சொன்னால் சரியல்ல. மாற்று பரிகாரம் நான் கேட்டுள்ளேன் அது பற்றிய விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அவ்வாறு மாற்று பரிகாரம் கோர எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. 126/9 பாப்பாத்தியம்மாளுக்கு சொந்தமானது என்றும் அவர் வருவாய்துறையில் பட்டா பெற்றுள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. பாப்பாத்தியம்மாள் நீதிமன்றம் மூலம் தீர்ப்பாணை பெற்றுள்ளதால் அது அவருக்குதான் சொந்தம் என்றும் நாங்கள் கோரியுள்ள பரிகாரம் கிடைக்காது என்று சொன்னால் சரியல்ல.

<u>2 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

வழக்கு சொத்துக்கள் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் கோவிந்தசாமி உடையார் மற்றும் ரத்தினசாமி உடையார் வாரிசுகளக்கு சொந்தமானது. கோவிந்த சாமி உடையார் மற்றும்

ரத்தினாசமி உடையார் அப்பா பெயர் என்ன என்றால் ரெங்கப்ப உடையார். நாங்கள் ஒரே ஊரில் வசிக்கிறோம் என்றால் நான் அதே ஊரில் வசிக்கிறேன் அவர்கள் இருவரும் வேறு ஊருக்கு போய்விட்டார்கள். எங்கள் ஊர் பெயர் என்ன என்றால் மூக்கப்புடையான்பள்ளம். ரெங்கப்பஉடையாருக்கு அதுதான் பூர்விகம் என்றால் ஆமாம். ரெங்கப்பஉடையார் வாரிசுகள் எங்கு வசிக்கிறார்கள் என்றால் நாகப்புடையான்பட்டி. புதுகோட்டை மாவட்டத்திலிருந்து பூர்விக சொத்துக்களை விற்றுவிட்டு அங்குபோய்விட்டார்கள். எங்கள் ஊருக்கும் நாகப்புடையான்பட்டிக்கும் எவ்வளவு தூரம் என்றால் 8கிமீ. நான் புதுகோட்டை மாவட்டத்தில் வசிக்கிறேன் நாகப்புடையான்பட்டி தஞ்சாவூரில் வசிக்கிறேன். வழக்கு சம்மந்தமான சொத்துகள் எங்குள்ளகு என்றால் புதுகோட்டை மாவட்டம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. நாங்கள் உரிமை கொண்டாடும் சொத்து புதுகோட்டை மாவட்டத்தில் உள்ளது. ரெங்கப்பஉடையாருக்கு துரைசாமி உடையார் மூத்த மகன் உண்டு என்றால் ஆமாம் திருமணம் செய்ததும் பாகம் வாங்கி பத்திரம் செய்துகொண்டு போய்விட்டார். அதனால் அவரை சேர்க்கவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் எல்லாம் கோவிந்தசாமி மற்றும் ரத்தினசாமியின் சுயசம்பாத்திய சொத்துக்கள் என்றால் இரண்டும் உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் அது விஷயம் குறிப்பு இல்லை என்றால் ஆமாம். அப்படியானால் வா.சா.ஆ.1 சொத்துக்கள் என்றால் வைத்திருந்த சொத்துக்களும் வரும். துரைசாமி, கோவிந்தசாமி, ரத்தினசாமி பாகம் பிரித்துகொண்டார்களா என்றால் மூத்த துரைசாமி பாகம் பிரித்து கொண்டுபோய்விட்டார். ரெத்தினசாமியும், கோவிந்தசாமியும் அவருடைய அப்பாவுடன் இருந்தார்கள். வா.சா.ஆ.9ஐ படித்துள்ளேனா என்றால் படித்துள்ளேன். வா.சா.ஆ.9 ஆவணத்தில் எத்தனை அட்டவணை உள்ளது என்றால் இரண்டு. சக்திவேல் அப்பா கோவிந்தசாமி எப்போது இறந்துபோனார் என்றால் 1985. நான் 1983 இல் பிறந்தேன். அதற்கு முந்தைய விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் என் அப்பா சொல்லி தெரியும். கோவிந்தசாமி மனைவி பெயர் என்ன என்றால் தெரியாது. கோவிந்தசாமி, கோவிந்தம்மாளுக்கு யார் யார் வாரிசு என்றால் பாப்பாத்தியம்மாள், வீரம்மாள், மணியம்மாள், சக்திவேல். கோவிந்தசாமி மகள்களுக்கு எப்போது திருமணம் என்றால் தெரியாது. கோவிந்தசாமி இறந்தபிறகு சக்திவேல் குடும்பம் பார்த்தார் என்றால் ஆமாம். கோவிந்தசாமி இறந்தபோது சக்திவேலுக்கு 25வயது என்றால் ஆமாம். வீரம்மாள் கணவர் பெயர் என்ன என்றால் வீரப்புடையார். அவர் மணியம்மாளையும் திருமணம் செய்துகொண்டார் என்றால் ஆமாம். வீரப்புடையார் நாகப்புடையான்பட்டி என்றால் ஆமாம். புல எண் 126/9 வழக்கில் உள்ளது என்றால் ஆமாம். அந்த சொத்தை கூட்டுகுடும்ப நன்மைக்காக 1990 இல் மணியிடம் அவர்கள் மேல் பாகம் விற்றாகிவிட்டது என்றால் ஆமாம்.

மணியும் நானும் ஒரே ஊர் என்றால் ஆமாம். எங்கள் ஊரில் எவ்வளவு குடும்பம் என்றால் 100இருக்கும். 126/9இல் கீழ்பாகத்தை நாங்கள் வாங்கியுள்ளோம் என்றால் ஆமாம். மணிக்கு சக்திவேல் விற்ற பத்திரம் தான் வா.சா.ஆ.1 என்றால் ஆமாம். என் அப்பா மேல்பாகத்தை எப்போது வாங்கினார் என்றால் 2002. அவ எண் 346/2004 தீர்ப்பு ஏற்படுவது முன்பாகவே என் அப்பா வாங்கினார் என்றால் ஆமாம். சி அட்டவணை சொத்தில் பெயர் மாற்ற 2013 இல் போனபோது என் அப்பா அவருக்கு தெரியும் என்று சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். அப்போது அந்த காரணத்தால் பட்டா மாற்ற முடியவில்லை என்றால் ஆமாம். பாப்பாத்தியம்மாளுக்கு ஒதுக்கபட்டதால் பெயர் மாற்றம் செய்யமுடியவில்லை என்றால் எங்கள் பெயரில் இருந்தது அவர்கள் பெயருக்கு மாற்றமுடியவில்லை. என் அப்பா இறந்ததும் மாற்றிவிட்டார். என் அப்பா 2016இல் இறந்தார் உடன் பாப்பாத்தி பெயருக்கு 2017 இல் மாற்றினார்கள் சிட்டா வாங்கினேன் அப்போது தெரிந்தது. மணியிடம் போய் கேட்டோமா என்றால் அவரும் இறந்துவிட்டார். அ.வ எண் 346/2004 வழக்கில் மணி தரப்பினர் என்றால் எனக்கு தெரியாது.வா.சா.ஆ.4 நீதிமன்றத்திலிருந்து 2013 ஆம் ஆண்டே நகல் வாங்கபட்டதாக உள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.4 ஐ படித்தேனா என்றால் இல்லை. தாவா காலாவதி தோசத்தால் பாதிக்கபட்டது என்றும், தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து ஏற்கனவே நீதிமன்றம் மூலம் பாகமாகிவிட்டது என்றும் அதனால் தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.03.16 18:33:01 +0530

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.